58 இந்திய மீனவரை இலங்கைபடை பிடித்தது

(சென்னை) கச்சதீவு கடற்பிராந்தியத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை 58 இந்திய மீனவர்களும் அவர்கள் சென்ற 15 படகுகளும் இலங்கை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 19 இதழ் 20
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 02 — 03 — 1993

ஐந்து படகுகள் தப்பிச்சென்றன

(சென்னை) கடந்தசனிக்கிழமை இந்திய மீனவர்களை இலங்கை கடற்படை துரத்திச் சென்று பிடித்த போது 5 இந்திய மீன்பிடிப்படகுகள் தப்பிச் சென்றுள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்தியத் தூதர் அவசர தொடர்பு

(கொழும்பு) இந்திய மீனவர்களின் விடுதலை குறித்து இலங்கைக்கான இந்திய தூதர் திரு. நரேஷ்வர் தயாள் இலங்கை அரசுடன் தொடர்புகொண்டுள்ளார்.

4-ம் பக்கம் பார்க்க)

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொ. நூலகம்

● ஒரே பகுதியில் 4 தடவை

மன்னாரில் விமானத் தாக்குதல்

நால்வர் பலி; பலர் படுகாயம்

பஸ்ஸை துரத்தி குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் கள்ளியடி கிராமத்தின் மீதும். அப்பகுதியில் பொதுமக்கள் சென்ற பஸ் ஒன்றின் மீதும், இக்கிராமத்தில் உள்ள கட்டடத் தொகுதி ஒன்றின் மீதும், நேற்று முன் தினம் காலை இரண்டு பொம்மர்கள் நடத்திய நான்கு வெவ்வேறு கொடுரத் தாக்குதல்களில், இரண்டு சிறுமிகள் உட்பட நால்வர் பலியாகினர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

கிளாலிகடற்பகுதியில்நேற்று பீரங்கி, ஹெலி தாக்குதல்

(நமது விசேட நிருபர்) கிளாலி கடற்பகுதியில் நேற்று மாலை திடீரென வந்த மூன்று பீரங்கி படகுகளும் ஹெலிகொப்டர் ஒன்றும் கரையில் நின்ற பொது மக்களை நோக்கி கடும்தாக்குதல் நடாத்தியுள்ளன. சுமார் 5 மணியளவில் மூன்று பீரங்கி படகுகள் திடீரென வந்து கிளாலி

(4-ம் பக்கம் பார்க்க)

தெரிவுக்குழுவை பகிஷ்கரிக்க தமிழ் குழுக்கள் முனையலாம்

(கொழும்பு) நாடாளுமன்ற தெரிவுக் குழுவை தமிழ்க்கட்சிகள் பெரும்பாலும் பகிஷ்கரிக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற தெரிவுக்குழு

(4-ம் பக்கம் பார்க்க)

மருதானை கோஷ்டி மோதல்

4 இளைஞர்கள் சுட்டுக்கொலை

(கொழும்பு) கொழும்பு மருதானைப் பகுதியைச் சேர்ந்த மாளிகாவத்தை சேரிப்பகுதி ஒன்றில் நேற்று நண்பகல் நான்கு இளைஞர்கள் கோஷ்டி ஒன்றினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பில் சில இளைஞர்களுக்குமுன் மாற்றுக் குழுவைச் சேர்ந்த ஒருவர் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்பட்டதையடுத்தே இத்துப்பாக்கிச்சூடு இடம் பெற்றதாக பொலிசார் தெரிவித்தனர்.

மேலும் கோஷ்டி உட்பூசல் இக்கொலைக்கு காரணமாக இருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கொலைச்சந்தேக நபர்கள் குறித்த தகவல்களும் குறிப்

(4-ம் பக்கம் பார்க்க)

சுகந்தன் இன்னாசித்தம்பி மாரடைப்பால் காலமானர்

(யாழ்ப்பாணம்) வடமாகாண பரியோவான் முதலுதவிப்படை ஆணையாளர் வைத்திய கலாநிதி றெஜினோல்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி நேற்றுக்காலை மாரடைப்பால் காலமானர். இவர் வடமாகாண பரியோவான் முதலுதவிச் சங்கத்தின் இயக்

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழகத்தில் குண்டு வெடிப்பு

(சென்னை) தமிழகத்தில் காமராஜர் மாவட்டத்தில் நேற்று வீடு ஒன்றில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மேலும் இரு குண்டுகள் வெடிக்காத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக தமிழகத்தில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் அதிகரித்து வருவதும் தெரிந்ததே. (சு-சி)

வேலைநிறுத்தத்தில் இ. தொ. கா. குதிக்கும்

(கொழும்பு) அமைச்சர் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேலைநிறுத்தத்தில் இறங்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களின் கோரிக்கைகள் பலவற்றைஅரசாங்கம் நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று கோரியே வேலைநிறுத்தத்தில் இறங்கப்போவதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் செயலர் திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார் என்று செய்திகள் கூறுகின்றன. (சு-சி)

கடற்படைக்கு புதிய பீரங்கி படகு

(கொழும்பு) பிரான்ஸ் நாட்டு தயாரிப்பான அதிவேக கடல் தாக்குதல் படகினைப் போன்ற படகுகளை தயாரிக்கும் முயற்சி

(4-ம் பக்கம் பார்க்க)

கொழும்பு பயணிகள் யாழ். வந்தனர்

(யாழ்ப்பாணம்) கொழும்பில் இருந்து புறப்பட்டு, பல நாட்களாக கிளிநொச்சி, ஆலங்கேணிப் பகுதிகளில் தரித்து நின்ற மக்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்று முன்தினம் யாழ். நகரிலிருந்து கொழும்புக்குப் புறப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் கிளிநொச்சிப் பகுதிக்குச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (விசெசி)

முப்பதுவீத சம்பள உயர்வு ஆசிரியர்களுக்கு கிடைக்கும்

(கொழும்பு) கடந்த வரவுசெலவுத்திட்டத்தில் ஆசிரியர்களுக்குவழங்கப்பட்ட 30 வீத சம்பள உயர்வு உடன் வழங்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் மற்றும் பயிற்சிபெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கே இச்சம்பள அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய இவ்வாண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

சாகித்திய மண்டலப் பரிசு

1989 ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற நூல் - 200 க்கும் அதிகமான நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- (சி-7227)

வேண்டுகோள்

குழப்பிட்டி சந்தியில் சிறு விபத்து காரணமாக எனது சயிக்கிள் கிரேம் F 418001 பொறுப்பெடுத்தவர்கள் தயவு செய்து 690, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (அடைக்கல மாதா கோவிலுக்கருகில்) அல்லது அமுதா வைத்திய நிலையம், கட்டப்பிராயில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (சி 7279)

அறிவுக் களஞ்சியம்

9

வெளிவந்துவிட்டது!

(ஏ-2924)

இன்று

(உடுவில்)

சுன்னாகம் தெற்கு வெள்ளை வீதியில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலையம். இன்று 2ம் திகதி காலை பதினொரு மணிக்கு திறந்து வைக்கப்படும் இச்சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் 50 வசதியற்ற குழந்தைகள் காலை முதல் மாலை வரை பராமரிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (109)

இராசி பலன்

02-03-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி 19)

நவமி பி. இ. 3-36 வரை மிருகசீரிடம் பி. இ. 3-40வரை சித்தயோகம். இராகுகாலம் மாலை 3-28 முதல் 4-58 வரை சுபநேரம் காலை 10-58 முதல் 12-28 வரை கச்சியப்பசிவாச்சாரியார் குருபூசை.

மேடம்: தொழில் பாதிப்பு, கல்விச்செலவு, குடும்பப்பிரிவு.

இடபம்: கடினமானவேலைப் பழு, வாக்குப்பலம், அலைச்சல்.

மிதுனம்: அயலவர் செல்வாக்கு. இனிய உறவு, மன மகிழ்ச்சி.

கடகம்: கருத்து வேறுபாடு, பயண செலவு, தொழில் நஷ்டம்.

சிம்மம்: ஜனப்புழக்கம், தியாகம், புதிய சூழ்நிலை.

கன்னி: மாமனூ லாபம், தொழில் ஏற்றம், குடும்ப சிறப்பு.

துலாம்: உறவினர் துன்பம், அதிகாரிகள் சினம், யோசனை.

விருச்சிகம்: புதுக்கடன், பாசப்பிரிவினை, மனசஞ்சலம்.

தனுசு: நண்பர் சேர்க்கை, மகான்கள் சந்திப்பு, மனைவியர் பெருமை.

மகரம் வீண்வம்பு, விரோதிகள் நன்மை, காரியசித்தி.

கும்பம்: மனக்கசப்பு, மனைவியர் துன்பம், வெறுப்பு.

மீனம்: உத்தியோக மாற்றம், காரியநடை, புத்திரர் சோகம்.

ஜோதியன்

நெஞ்சம் நெகிழும் 60-ம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

அந்தியேட்டி அழைப்பும்



உயர்திரு அமரர்

இராசிங்கம் செல்லத்துரை

தோற்றம் (மண்ணில், 26-04-1926

மறைவு (மனதில்) 02-01-1993

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலைய நிறுவுனர்களில் ஒருவரும் முன்னாள் தலைவரும், போசகரும்

நவக்கிரி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய தர்ம கர்த்தா சபை உறுப்பினர்

நவக்கிரி முன்னாள் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர்

நவக்கிரி அ. மி. த. கலவன் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்

யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி, அச்சுவேலி. யா/சோமஸ்கந்தா கல்லூரி புத்தூர். } முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்

முன்னாள் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவு குழு உறுப்பினர்.

ஓ எங்கள் உயிரே
உறவுக்காய் உவகையுடன்
உயர்பணிகள் ஆற்றி நின்ற
தாத்தாவே எம் தந்தையே
கிளாலிக் கடல் உன்னை
எம்மை விட்டுப் பிரித்ததுவோ
ஊருக்காய் உழைத்திட்ட உத்தமனே
காலத்தால் அழியாத காவியமே
அணைந்தும் அணையாத அகல் விளக்கே
உங்கள் செய்கைகள் சொல்லுகள்
எந்நாளும் எம் நெஞ்சை விட்டு
என்றுமே அகலாது — உங்கள்
நினைவுடனே வாழும் நாம்.

02 01-1993 அன்று கிளாலிக் கடலில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையில் அகால மரணமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கான அமரர் இராசிங்கம் செல்லத்துரை அவர்களின் இறுதி நிகழ்வுகளுக்கு உதவிய இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சிப் பிரிவு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வாகன உரிமையாளர்கள், சாரதிகள், படகோட்டிகள், வருப்புத் தொழிலாளர்கள் கிளிநொச்சி வைத்திய சாலை மருத்துவர்கள் ஊழியர்கள், விடுதலைப்புலிப் போராளிகள், தமிழீழ காவல்துறையினர் மற்றும் எம்மோடு தோளோடு தோள் நின்று எமக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அவ்வகையில் உதவி செய்தோருக்கும், அனுதாபச்செய்திகளை அனுப்பியோருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

02-03-1993 இன்று எமது வீட்டில் இடம்பெற இருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

02-01-1993 அன்று கிளாலிக் கடற்பரப்பில் பலியான அனைத்து தமிழீழ மக்களுக்கும் எமது ஆத்ம அஞ்சலிகள்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

எல்லாளன் சனசமூக நிலைய அருகாமை,
நவக்கிரி, புத்தூர். (சி-7276)

உடுத்துறை கொத்தணி உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

[தாளையடி]

உடுத்துறை கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் உடுத்துறை கொத்தணி அதிபர் ந. அரியரத்தினம் தலைமையில் தாளையடி செவ். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக தாளையடி பங்குத்தந்தை அருட்திரு. எம். டேவிட் அடிகளார் கலந்து கொண்டார். போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்.

15 வயதுக்கு கீழ் ஆண்கள்

1 தாளையடி றோ. க. த. க. வித்தியாலயம், 2. உடுத்துறை ம. வி, 3. ஆளியவளை சீ. சீ. பாடசாலை.

15வயதுக்கு கீழ் பெண்கள்

1. தாளையடி றோ. க. த. க. வித்தியாலயம் 2 உடுத்துறை ம. வி, 3. ஆழியவளை சீ. சீ. த. க. பாடசாலை.

17 வயதுக்கு கீழ் ஆண்கள்

1 உடுத்துறை ம. வி, 2. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி.

17 வயதுக்கு கீழ் பெண்கள்

1 உடுத்துறை ம. வி. 2. வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தி, 3. ஆளியவளை சீ. சீ. த. க. பாடசாலை.

19 வயதுக்கு கீழ் ஆண்கள்

1. மருதங்கேணி இ. த. க. வித்தி, 2. உடுத்துறை ம. வி.

19 வயதுக்கு கீழ் பெண்கள்

1. மருதங்கேணி இ. த. க. வித்தி, 2 உடுத்துறை ம. வி.

மெய்வல்லுநர் போட்டி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் சந்திரசேகரம் தலைமையில் நாளை 3ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலக பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் பண்டத்தரிப்புப்பிரிவு மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. தமிழ்மாறன். விடய இணைப்பாளர் திரு. கலாநேசன், வட்டுக்கோட்டை கொத்தணி பிரதி அதிபர் சைவப்புலவர் நா. வ. தங்கரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (139)

வணிகஜோதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் "வணிக ஜோதி" சஞ்சிகை வெளியீட்டு விழா இம்மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு செல்வன் போல் ரவி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துறைத் தலைவர் பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் பிரதிக்கல்விப்பணிப்பாளர் சி. வேலாயுதம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ள இருக்கின்றனர். (சு)

மருந்துத் தட்டுப்பாடு

(தாளையடி)

இப்பகுதி வைத்தியசாலைகளில் மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது சிகிச்சைபெற செல்லும் நோயாளர்கள் வைத்தியசாலைகளில் மருந்துகள் இல்லாத காரணத்தால் நோயாளர்கள் பணம் கொடுத்து கடைகளில் மருந்து வகைகளை வாங்கும் நிலையில் உள்ளனர். (163)

தையல் மனையியல் பொருட்காட்சி

(பருத்தித்துறை)

தையல், மனையியல் பொருட்காட்சியொன்று பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. சி. முருகேசபிள்ளை தலைமையில் மாதனை கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. வீ. எஸ். சுவாமிநாதன் நாடாவைவெட்டி தையல் மனையியல் கண்காட்சியைத் திறந்துவைத்தார். -52

ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்:
05 01-1924

★
★
★

ஆண்டவன் அடியில்:
12 03-1992

பெரியதம்பி சபாரெத்தினம்

குடும்பத்தின் குலவிளக்கே!
நீங்கள் சென்று ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டு அகலாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

8/7, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம். (கி 7277)

"தமிழ் வளர்ச்சி கழகத்தினால்

5000 பேருக்கு தூய தமிழில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது"

— இளங்குமரன்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் 5000க்கு மேற்பட்டவர்களுக்கு தூய தமிழில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

இவ்வாறு தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவைப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ். வைத்தீஸ்வராவில் நடந்த ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கத்தின் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்கூறியதாவது- ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் 75 ஆண்டுகளை அண்மித்துக் கொண்டிருக்கிறது. 1922ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் இதுவரை பல தமிழ் மொழி அறிஞர்களை உருவாக்கியுள்ளது.

தற்போது தமிழ் மக்கள் மத்தியில் சுதந்திர உணர்ச்சி, விடுதலை உணர்ச்சி ஆகியவை மேலோங்கி நிற்கின்றன.

ஆரிய திராவிட விருத்திச் சங்கம் தனியாக பாடசாலை நடத்தவேண்டும் இங்கு தமிழ் மொழியை முறைப்படி கற்பிக்க விருப்புஉள்ளம்கொண்ட தமிழ் அறிஞர்களைக்கொண்டு பாடநெறிகளை போதிக்கப்படவேண்டும்.

இதன்முன்னேற்றத்துக்காக தமிழீழ கல்விக் கழகம் தன்னாலான உதவிகளை வழங்கும்.

குறிப்பாக தரமான தமிழ் மொழி கற்கைநூல்களை பெற்றுக் கொள்வதில் ஏற்படும் பெரும் சிரமத்தை தவிர்த்துக் கொள்ளும் வகையில் பொது இடத்தில் இவ்வாறான சிறந்த நூல்களை சேகரித்து வைத்து அவற்றை மாணவர்கள் அங்கேயே வந்து கற்றுக்கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்வதற்கும்- இரவு நேரங்களில் அவற்றை பயன்படுத்த வெளிச்சமும் வழங்க ஏற்பாடுகள் செய்யலாம்.

தூய தமிழை வளர்ப்பதற்கு 1991ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

மக்கட் பெயர் அகராதியும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினால் வெளியிடப்பட்டது. தற்போது வடமொழி தமிழ் அகர முதலிஒன்றை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. (சு)

யாழ். ஆஸ்பத்திரியில்

கடந்த மாதம் 18,000 பேர் சிகிச்சை பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் 18,000த்திற்கும் மேற்பட்டோர் கடந்த பெப்ரவரி மாதத்தில் சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

இவர்களில் நான்காயிரத்திற்கு மேற்பட்டோர் பல தடவை வந்து சிகிச்சை பெற்றவர்களாவர்.

இவர்களில் 60 வீதமானோர் மலேரியா, நெருப்புக்காய்ச்சலினாலேயே பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருக்கின்றனர்.

மற்றும் காய்ச்சல், விபத்துக்கள், வயிற்றுளைவு, வயிற்றோட்டம், சளி முட்டு ஆகிய நோய்களினாலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள், சிறுவர்கள் சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் 16,400 பேர்வரையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (56)

செய்திச்சிதறல்

பயிற்சிக் கருத்தரங்கு

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள மாதர்கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பயிற்றப்பட்ட மாதர்களுக்கு இம் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பயிற்சிக் கருத்தரங்கு இடம்பெறும். (154)

வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமாசங்களின் சம்மேளனத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் இம் மாதம் 6ம் திகதி யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சு. டிவகலால கலந்துகொள்வார். (161-154)

உடையார்கட்டு குளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கோட்டத்திற்குட்பட்ட உடையார்கட்டு நீர்ப்பாசன குளத்தில் பாரிய திருத்த வேலைகள் செய்துமுடிக்கப்பட்டுள்ளன

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் தேசநிர்மாணிகளின் முயற்சியுடன் இத் திருத்த வேலைகள் துரிதமாகச் செய்யப்பட்டது இக்குள புனரமைப்பு வேலையினால் 5000 அடி நீளமான 26அடி உயரமான அணைக்கட்டுதிருத்தியமைக்கப்பட்டது. (87)

மெய்வல்லுனர் போட்டி

(தாளையடி)

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர்போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் திருமதி லு. மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தவக்கால நற்சிந்தனை

"மனிதரை நீங்கள் மன்னியாவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்" மத். 6-15. 'உன் பகைவனையும் அன்புசெய்' என்பது இறைவாக்குஇதுஎமது நடைமுறை வாழ்வில் மிகக் கடினமான காரியம். ஆனால் இறைமகன் கிறீஸ்து சிலுவையில் உயிர் துறக்கும் வேளை இதனை எமக்குக் காண்பித்தார். மன்னிப்பின் மகத்துவத்தைஎண்பித்தார். இறைவன் எம் குற்றங்களை மன்னிக்க வேண்டின் பிறர் குற்றங்களை நாம் மன்னித்து வாழுவோம்.

மோ. தார்சிசியஸ்.

போட்டி முடிவுகள்

(அரியாலை)

யாழ் மறைக்கல்வி நிலையம் நடாத்திய வேதாகமக்குறுக்கெழுத்துப் போட்டியில் பரிசு பெற்றவர்கள்:

ஜோன் சுவாஸ் சுகிசெல்வி (உரும்பராய்), இக்னேசியஸ் மரியதாஸ் (மானிப்பாய்), கி. மொனிக்கா (பருத்தித்துறை) -59

ச. ச. நிலைய திறப்புவிழா

(நெல்லியடி)

மானிப்பாய் கிழக்கு பாரதி சனசமூக நிலைய திறப்பு விழா அண்மையில் திரு. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். டிவகலாலா நிலையத்தை திறந்து வைத்தார். -160

சிரமதான பணி

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை முள்ளி வீதி, முள்ளி தச்சுத்தொழிலாளர் சங்கத்தின் உதவியுடனும் அப்பகுதி பொது மக்களின் ஒத்துழைப்புடனும் சிரமதான மூலமும் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. -71

வாகனங்கள் வழங்கப்படும்

(கொழும்பு)

தற்போது நாடெங்கும் நிறுவப்பட்டுள்ள பிரதேசசெயலகங்களுக்கு ஒரே நேரத்தில் வாகனங்கள் கிடைக்கவுள்ளன.

207 பிரதேசசெயலகங்களுக்கும் 207 டபிள்காப் வாகனங்கள் வழங்கப்படும். கே.

நினைவு விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகமும் பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றமும் இணைந்து நடாத்திய ஷோக்கிஸ் முத்தையா நினைவுவிழா ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபத்தில் திரு. சு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. -52

குழாய்க்கிணறு

(கொழும்புத்துறை)

அரியாலை, வசந்தபுரம், கோப்பாய், கைதடி, தொல்புரம் ஆகிய கிராமங்களில் சர்வோதயம் அமைப்பினர் மக்களுக்கு குழாய்க்கிணறுகளை அமைத்துக்கொடுக்கவிருக்கின்றனர். -154

இலக்கத்தகடு விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் பட்டின சபையினர் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வைத்து அப்பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இவ்வருடத்திற்குரிய சைக்கிள் இலக்கத் தகடுகளை கடந்த வாரம் விநியோகம் செய்தனர். -71

---

140 பேருக்கு நாய்க்கடி

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதத்தில் யாழ் போதனா வைத்திய சாலை வெளிநோயாளர்பகுதியில் 140 பேர் நாய்க்கடிக்குள்ளாகி சிகிச்சை பெற்றுள்ளனர்

இவர்களில் 20 பேர் விசர் நாய்க்கடிக்குள்ளாகிய நிலையில் தற்போது விசர் நாய்க்கடித்தடுப்பூசி மருந்துகளை செலுத்தி வருகின்றனர். (56-கி)

கைது

(புதுடில்லி)

பாரதீய ஜனதா கட்சி எம். பியும் இந்திய அரசால் தடைசெய்யப்பட்ட பஜ்ரங் தள் அமைப்பின் தலைவருமான திரு. வினைக்கதியா 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்கு கொள்ள வந்தபோது இவர் கைதானார். இவர் தனது பேச்சுக்கள்மூலம் மத இனவாத பதற்றத்தை உருவாக்க முயன்றதாகக் கூறியே பொலிசாரால் கைது செய்யப்பட்டார். (கி)

பல்கலைக்கழக சகல பீடங்களும் திறக்க ஏற்பாடு

(கொழும்பு)

சகல பல்கலைக்கழகங்களும் பூரணமாக செயற்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாரம் புதிய தவணைக்காக சகல பீடங்களும் திறக்கப்படும்.

ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் நேற்று திங்களிலிருந்து சகல புதிய மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டு விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (கே)

மார்ச் 10ல்

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் கொடி தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இந்து சமயப் பேரவை, கைதடி சைவச்சிறுவர் இல்லத்தின் கொடிதினம் எதிர்வரும் 10ம் திகதி புதன்கிழமை யாழ். மாவட்டம் முழுவதிலும் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலைகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், பொது இடங்கள் ஆகியவற்றில் கொடிகள் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைபவ ரீதியாக கொடி விற்பனை, இந்து சமயப்பேரவைத் தலைமைக் காரியாலயத்திலும், கைதடி சைவச் சிறுவர் இல்லத்திலும் ஆரம்பித்து வைக்கப்படும்.

இக்கொடிதினம் மூலம் சேர்க்கும் பணம் போரினால் தாய் தந்தையரை இழந்த அல்லது அநாதரவாக்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிப்பதற்கும், ஆதரவற்றோர்களுக்கு உதவுவதற்கும் பயன்படுத்தப்படுமென்றுபேரவைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தலைவர் தெரிவு ஒத்திவைப்பு

(கொழும்பு)

'டி. யு. என். எவ்' கட்சியின் தலைமைப்பீடம் தெரிவாகும் விடயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தற்போது கட்சியின் செயற்குழுவிடம் தலைமைப்பீடம் தெரிவாகும் விடயம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற அரசியற் பிரிவின் கூட்டத்தில் சிரேஷ்ட உப தலைவர் காமினி திசநாயக்கா தலைவர் தெரிவை எதிர்த்ததோடு பிளவு ஏற்படாமல் இருக்க தலைவர் தெரிவை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டார். (கே)

உள்ளூர் உணவு தயாரிப்பு போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ்/கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் போட்டி இம்மாதம் 07ம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்தவுள்ளது. இப்போட்டி உள்ளூர் மூலவளங்களை அடிப்படையாகக் கொண்டு உணவு தயாரிப்பதே நோக்கமாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கல்விதான் தமிழரின் அழியாத சொத்து"

(வட்டுக்கோட்டை)

"கல்விதான் தமிழ் மக்களின் பாரம்பரியமான-என்றென்றும் அழியாத சொத்து. இதனை வளர்ப்பதில் சகலரும் முன்வரவேண்டும். தமிழ் மக்களின் சுதந்திரத்தில் எழுபத்தைந்து வீதமான பங்கு மாவீரர்களுக்கே உண்டு. தலைவர் பிரபாகரனின் ஆலோசனைப்படி எமது போராளிகள் இயங்கி வருகின்றனர். தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கு மூலகாரணமாக இருக்கும் விடுதலைப் புலிகளுக்குசகலரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்"

அராலி வள்ளியம்மை வித்தியாலய மண்டபத் திறப்பு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் வலிகாமம் பொறுப்பாளர் திரு. ச. இலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் ஆ. த. ஜெயராசா தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டுமண்டபத்தை திறந்துவைத்துஉரையாற்றிய பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம் பேசும்போது கூறியதாவது: வசதி குறைந்த பெற்றோர்களின் பிள்ளைகள் தவறாது கல்வியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரதும் சிறந்த வாழ்வுக்கு கல்விதான் வழிகாட்டி. வசதி குறைந்த பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். கல்வியின் பெறுமானத்தை விளங்காது தமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாது இருக்கும் பெற்றோரே பிற்காலத்தில் கஷ்டப்படுகின்றனர்" என்றார். ஆங்கில ஆசிரியர் திரு. எஸ். பெருமாள் நன்றி கூறினார். [139]

இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் ஈ. கே. குமரையா ஞாபகார்த்தமாக விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திவரும் நொக்கவுட் உதைபந்தாட்டப் போட்டியின், இன்றைய ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் கழகத்தை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகமும் மோதும்.

இப்போட்டி இன்று அரியாலை மத்திய மைதானத்தில் நடைபெறவுள்ளது. (வி)

★ யாழ்ப்பாணத்திற்கு

வெளிநாட்டு தபால்கள் எடுத்துவர

துரித ஏற்பாடு நடக்கிறது

(திருநெல்வேலி)

கொழும்பிலிருந்து வெளிநாட்டுத் தபால்களை யாழ்ப்பாணம் எடுத்துவர கொழும்பிலுள்ள வடமாகாண தபால் அத்தியட்சகர் முயற்சிசெய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர் அரச அதிகாரிகளுடன் இது பற்றி பேசி உள்ளதாகவும் கப்பல் மூலம் விரைவில் இவை எடுத்துவரப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இருமுறை வந்த கப்பல்கள் மூலம் உள்ளூர் தபால்களே எடுத்துவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இம்முறை வரும் கப்பலில் வெளியூர் தபால்களும் எடுத்துவரப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (157-சி)

வலி-மேற்கில் ஹெலி ரோந்து

(யாழ்ப்பாணம்)

வலி-மேற்குப் பகுதியில் நேற்று நண்பகல் வேளையில் ஹெலி ஒன்று வட்டமிட்டு நோட்டமிட்டது.

மானிப்பாய், சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, மூளாய், பண்டத்தரிப்புப் பகுதிகளை சுற்றியே ஹெலி வட்டமிட்டது. (56-72-சி)

மூன்று கப்பல்கள் யாழ்.வருகின்றன

(யாழ்ப்பாணம்)

'நிக்கிரி' கப்பல் இவ்வார இறுதியில் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. இருவிரைவு பாஜ்களும் எடுத்துவரப்படவுள்ளது.

குமாரி கப்பல் நாளை காங்கேசன்துறை துறைமுகத்தை வந்து சேரவுள்ளது. இக்கப்பலில் சுமார் 2000 மெட்ரிக் தொன் மா எடுத்துவரப்படவுள்ளது.

இதேவேளை குமண கப்பல் இன்று கொழும்புதுறைமுகத்திலிருந்து புறப்படவுள்ளது. இந்தக்கப்பலில் தபால் பொதிகளும் எடுத்துவரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. மெரிஞ கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும் வேலைகள் நேற்று ஆரம்பமாகின. (159-சி)

மரண அறிவித்தல்

சில்லாலை

டாக்டர்

சுகந்தன் இன்னாசித்தம்பி

சில்லாலை டாக்டர் றெஜினோல்ட் சுகந்தன் இன்னாசித்தம்பி 01-03-93 அன்று காலமாகிவிட்டார். இவர் சில்லாலை காலஞ்சென்ற டாக்டர் பற்றிக் இம்மானுவேல் இன்னாசித்தம்பி, திருமதி றீற்றா இன்னாசித்தம்பி, அவர்களின் அன்புப்புதல்வனும், ஜொவித்தாவின் அருமைக் கணவரும், துஷாரா, தனுஷ்ரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், சிறீமலர் பிள்ளைநாயகம், ஜெயந்தன், ரவீந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிள்ளைநாயகம், பிறீனி, அருட்சகோதரி ஜிசிந்தா மாறி (தி. கு. க. சபை) நீக்கா, தோமஸ், நியந்தன், நிஷாந்தன், ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 03-03-93 புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து புனித அடைக்கல நாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின்பின் சில்லாலை இன்னாசித்தம்பி ஞாபகார்த்த சிற்றாலயத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஜொவித்தா
(மனைவி)

171, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2928)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B

மருதானை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட சேமிப்பகுதிக்கு சென்று தாக்குதலை நடத்திய சந்தேக நபர்களையும் தமக்கு தெரியும் என்றும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பணியக இயக்குநர் கொட்சிறி குணசேகரா ஸ்தலத்திற்கு விஜயம்செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார். (க-சி)

5 படகுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கச்சதீவு கடற்பகுதிக்கு விரைந்த இலங்கை கடற்படையினர் சகல இந்திய படகுகளையும் சுற்றிவளைக்க முயன்றபோதே இந்த 5 படகுகளும் மீனவர்களுடன் தப்பிச்சென்றனவாம்.

இவற்றை துரத்திச் சென்றபோதும் இலங்கை கடற்படையால் பிடிக்கமுடியவில்லையாம். (சி)

முப்பது வீத

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரியிலிருந்து 300 ரூபா கூடுதலாகவும் எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்துமேலும் 200 ரூபா அதிகரிப்பும் வழங்கப்படவுள்ளது.

சுமார் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இச்சம்பள அதிகரிப்பின் மூலம் பயனடையவுள்ளனர். (க-சி)

58 இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கச்சதீவுப் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை துரத்திச்சென்றகடற்படையினர், 58 மீனவர்களையும் அவர்களது மீன்பிடி உபகரணங்களையும், 15படகுகளையும் பிடித்து கடற்படைமுகாமுக்கு கொண்டு சென்றனர்.

இலங்கை கடற்படையால் இவ்வளவு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டது இதுவே முதல் தடவையாகும்.

இதற்கிடையில் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு இராமேஸ்வரம் விசைப்படகு சங்கம் தமிழக முதல்வருக்கு அவசர தந்தி அனுப்பியுள்ளது. (சி-க)

சுகந்தன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞரும். லங்கா ஆயுர்வேதக் கல்லூரியின் அதிபருமாவார். சில்லாலையூர் சித்த ஆயுர் வேத மருத்துவத்தில் பிரபல்யமான குடும்பமான இன்னாசித்தம்பி பரம்பரையின் 10-வது தலைமுறையாளர் ஆவர்.

இவர் பரியோவான் முதலுதவிச் சங்கத்தில் 1968 இல் சேர்ந்து 1977 ஆம் ஆண்டு பரியோவான் பிரதேச வைத்திய நிபுணராக நியமனம் பெற்று பின் 1978 இல் வடமாகாண பரியோவான் முதலுதவிச் சங்க இயக்குனராக நியமனம் பெற்றார் 1980 முதல் பிரதேச ஆணையாளராக நியமனம் பெற்ற இவர் 1986 முதல் வடமாகாண ஆணையாளராக நியமனம் பெற்றார். இவரது காலத்தில் பரியோவான் முதலுதவிச் சங்கமும் படையும் கிராமிய மட்டத்தில் பெரும் வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது' (சி)

ஆர்ப்பாட்டப் பேரணி

(யாழ்ப்பாணம்)

பொருளாதாரத்தடை மற்றும் போக்குவரத்துச் தடையை எதிர்த்து தென்மராட்சி வர்த்தக சங்கங்களும் பொது மக்களும் இன்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு மீசாலையில் ஆரம்பமாகும் இப்பேரணி சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு சென்று, அங்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பிக்கும். (சி)

இந்தியத் தூதர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து திரு. நரேஷ்வர் தயாள் நேற்று இலங்கை பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுக்கள் நடாத்தியுள்ளார்.

இதேவேளை இவ்விவகாரம் குறித்து தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு அவசர செய்தி அனுப்பியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன, (சி)

ஒரே பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஞாயிறு காலை 8-30 மணியளவில் கள்ளியடி கிராமத்தைச் சுற்றிப் பல தடவை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள், திடீரென இக்கிராமத்தின் மீது குண்டுத் தாக்குதலை நடத்தியதில் எஸ். ராசதுரை (49 வயது-கூராவில்) என்பவர் பலியானார் இத்தாக்குதலில் கள்ளியடியைச் சேர்ந்த வசந்தமலர் (வயது 32, புண்ணியலட்சுமி (வயது 33) ஆகிய இரண்டு பெண்கள் படுகாயம் அடைந்தனர்.

மீண்டும் காலை 9-45 மணியளவில் ஒரு ஹெலிகொப்டர் சகிதம் வந்த இவ்விரு பொம்மர்களும், பொதுமக்கள் பயணம் செய்துகொண்டிருந்த பஸ் ஒன்றைத் துரத்திச் சென்று குண்டு வீசித் தாக்கின. இத்தாக்குதலில் ஷர்மிளா (வயது 07), மங்கையர்க்கரசி (வயது 30) ஆகிய இருவரும் பலியாகினர்.

பஸ்ஸில் பயணம் செய்த ஒரே குடும்பத்தை சேர்ந்த கள்ளியடியில்வசிப்பவர்களான கு. தர்மினி, கு சுபோதினி, கு. தங்கதாஸ், கு. பிரதீபன், கு. தபோதினி ஆகியோர் படுகாயமடைந்தனர்.

மீண்டும் மூன்றாவது தடவையாக இங்கு வந்த பொம்மர்கள் இப்பகுதியில் ப. நோ.கூ. சங்கம் மற்றும் இரண்டு தனியார் கடைகள் மீது பலத்த குண்டுத் தாக்குதலை நடாத்தின. இதனால் சிறுமி ஒருவர் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயமடைந்தனர்.

மேற்படி கடைகளும் பலத்த சேதமடைந்ததுடன் பல மோட்டார் சைக்கிள்களும், பெறுமதி மிக்க பல பொருட்களும் முற்றாகச்சேதமடைந்தன.

இதன்பின் பாலியாற்று பகுதியில் பொம்மர்கள்நடாத்திய குண்டு வீச்சில் சிமெந்திலான தண்ணீர் தாங்கி ஒன்று இடிந்து விழுந்துமுள்ளது. (சி)

கிளாலி கடற்பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கரையை நோக்கி பலத்த தாக்குதலை நடத்தின. இதேவேளை மாலை 6-20 மணியளவில் வந்த ஹெலி ஒன்றும் கிளாலி கரையை நோக்கி சலிபர் தாக்குதலை நடாத்தியது.

ஆலங்கேணி நோக்கி பயணம் செய்ய நின்ற பெருமளவு பயணிகள் இதனால் அல்லோலகல்லோலப்பட்டு பாதுகாப்பு இடங்களை நோக்கி சிதறி ஓடினர். சிலர் சிறு சிறு காயமடைந்தனர்.

இத்தாக்குதலையடுத்து நேற்று இரவு பயணிகள் பலர் யாழ்ப்பாணம் திரும்பினர். (சி)

தெரிவுக் குழுவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் இடைக்கால அறிக்கை வெளியான பின்னரே தமிழ்க்கட்சிகள் தமது அடுத்த நிலைப்பாடு குறித்துதீர்மானிக்கும்.

தமிழ்க்கட்சிகளிடையே கருத்தொருமித்த உடன்பாடு தற்போது இல்லாததனால் தெரிவுக்குழுவை தமிழ்கட்சி கள்பகிஷ்கரிக்கக் கூடுமெனவும் தெரியவருகிறது. (கே-சி)

கடற்படைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஸ்ரீலங்கா அரசு தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக ஆராயுமுகமாக 16 பொறியியல் நிபுணர்கள் பிரான்ஸ் சென்றுள்ளனர்.

இதுசம்பந்தமான பொறுப்புக்கள் கொழும்பு டொக்யாட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் படகுகளுக்காக 360 மில்லியன் ரூபாவை அரசு பிரான்சுக்கு செலுத்த வேண்டியுள்ளதாலும் தொழில்நுட்பம் மற்றும் இதர விடயங்களுக்கு அந்நிய நாடுகளை எதிர்பார்க்க வேண்டிய நிலையை தவிர்ப்பதற்காகவே இந்நடவடிக்கையில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட விரும்புவதாகக் கூறப்படுகிறது. (க - சி)

மரண அறிவித்தல்

அமரர்

தம்பிப்பிள்ளை கோபாலரத்தினம்

காரைநகர் பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், தற்போது சுழிபுரத்தில் வசித்து வந்தவருமாகிய பெருமாள் தம்பிப்பிள்ளை மகன் கோபாலரத்தினம் (முன்னாள் சிவகாமி அம்பாள் கூட்டுறவுசங்க மனேஜர்] அவர்கள் நேற்று 1 - 3 - 1993 இல் காலமானார். அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ராஜகருணா, தருமகுமார் (சுவிஸ்), சண்முககுமார் (பல்கலைக் கழகம் (வவுனியா), சத்தியம்மா ஆகியோரின் அன்புத்தந்தையும், இராசம்மா, காலஞ்சென்ற பூபாலரத்தினம், சபாரட்ணம் (மஹாலட்சுமி நகைமாளிகை) துரைராசா (மஹாலட்சுமி நகைமாளிகை), காலஞ்சென்ற மிருகண்டேயர், நடேசலிங்கம் (மஹாலட்சுமி நகை மாளிகை] ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தசாமியின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் 2-3-93 செவ்வாய் பகல் 11 மணியளவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குமுன்பாக உள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று மூளாய்மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
த. நடேசலிங்கம்
[சகோதரர்]

12/6, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[சி-7280]